# சென்னை – புளியந்தோப்பில், பொங்கல் திருநாளையொட்டி
# 1,300 தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் - உணவு !
## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி - பரிமாறினார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.1.2026) சென்னை, புளியந்தோப்பு, டான்பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில், 1300 தூய்மைப் பணியாளர்களுக்கு பொங்கல் பரிசுகள் வழங்கி. அவர்களுக்கு உணவு பரிமாறினார். இவ்விழாவில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்ட ஆணையர் கௌஷிக், மண்டல அலுவலர்கள் பேராசிரியர் அப்துல் காதர், அருட்தந்தை ஜாய், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜன.11-**

**சென்னை புளியந்தோப்பில் பொங்கல் திருநாளையொட்டி 1,300 தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். தூய்மை பணியாளர்களுக்கு உணவு பரிமாறிய முதலமைச்சர், அவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்.**

பொங்கல் திருநாளையொட்டி, தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். தூய்மைப்பணியாளர்களுக்கு மதிய உணவு பரிமாறி, அவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்.

சென்னை மாநகரை தூய்மையாக வைத்திருக்க நாள்தோறும் இரவு, பகல் என்று பாராமல் உழைக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கு பொங்கல் திருநாளையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை புளியந்தோப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, ஆயிரத்து 300 தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார். பின்னர், தூய்மைப்பணியாளர்களுக்கு மதிய உணவு பரிமாறி, அவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.1.2026) ஜவகர் நகர், கொளத்தூர் சட்டமன்ற அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டார். இவ்விழாவில், திருமதி துர்கா ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிச்சந்திரன், மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், பகுதிக் கழக செயலாளர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி ஹெலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஜவகர் நகர், கொளத்தூர் சட்டமன்ற அலுவலகம் அருகில் நேற்று (10.1.2026) நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் மாணவிகள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். உடன் திருமதி.துர்கா ஸ்டாலின் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.1.2026) ஜவகர் நகர், கொளத்தூர் சட்டமன்ற அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில், ஜல்லிக்கட்டு காளையை பார்வையிட்டார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.

## அமலாக்கத்துறைக்கு எதிராக
# கொல்கத்தா காவல்நிலையத்தில் மம்தா பானர்ஜி புகார்!
### கட்சி அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்தது உள்ளிட்ட 4 பிரிவுகளில் வழக்கு!

*கொல்கத்தா, ஜன.11-*

அமலாக்கத்துறைக்கு எதிராக, மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி கொல்கத்தா காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதையடுத்து, அமலாக்கத்துறை மீது காவல் நிலையத்தில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.



மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள திரிணாமுல் காங்கிரஸ் அலுவலகத்தில் அமலாக்கத்துறை அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டனர். மேற்குவங்க மாநில சட்டபேரவை தேர்தல் நெருங்கி வரும் வேளையில் அமலாக்கத்துறையினரின் சோதனை அரசியல் உள்நோக்கம் கொண்டது என திரிணாமுல் காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஒன்றிய பா.ஜ.க., அரசு மற்றும் அமலாக்கத் துறையை கண்டித்து கொல்கத்தாவில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் பேரணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், கட்சி அலுவலகத்தில் புகுந்து திடீர் சோதனை என்ற பெயரில் ஆவணங்களை அமலாக்கத்துறை திருடியதாக, கொல்கத்தாவில் உள்ள ஷேக்ஸ்பியர் சராணி காவல் நிலையத்தில் மம்தா பானர்ஜி புகார் அளித்தார். அதனைத் தொடர்ந்து, அமலாக்கத்துறைக்கு எதிராக கொல்கத்தா போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். புகாரில், திரிணாமுல் கட்சி அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்தது, மிரட்டியது, ஆவணங்களை திருடியது, மின்னணு ஆவணங்களை சேதப்படுத்தியது ஆகிய 4 பிரிவுகளில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று, அமலாக்கத்துறைக்கு எதிராக, இரண்டாவது வழக்கு எலக்ட்ரானிக் காம்ப்ளெக்ஸ் காவல் நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ‘குறள் வாரவிழா’ நிகழ்வுகளுக்கான சிறப்புக் காணொலி - பதாகை!
## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஜன.11-**

**“முக்கடல் சூழும் குமரி முனையில், முப்பால் புலவர் வள்ளுவருக்கு முத்தமிழறிஞர் வைத்த சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவையொட்டி 31.12.2024ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற வெள்ளிவிழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், “தமிழின் பெருமையை, குறளின் அருமையை இளைய தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் கடைசி வாரம் ‘குறள் வாரம்’ கொண்டாடப்படும் எனவும் தமிழ்த் திறனறித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான திருக்குறள் மாணவர் மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும்” எனவும் அறிவிக்கப்பட்டது.**

மேற்கண்ட அறிவிப்பினை செயற்படுத்திடும்பொருட்டு, 2026ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் **“குறள் வாரவிழா”** கொண்டாடிட ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வகையில், சேலம், திருச்சிராப்பள்ளி, தேனி, கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் திருக்குறள் நாட்டிய நாடகம் / இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.01.2026) முகாம் அலுவலகத்தில், “திருக்குறள் திருவிழா குறள் வாரம்” நிகழ்வுகளுக்கென தயாரிக்கப்பட்டுள்ள சிறப்புக் காணொலியையும், நிகழ்வுகளுக்கானப் பதாகையினையும் வெளியிட்டார். இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் மற்றும் திருக்குறள் வார விழா நிகழ்வுகளுக்கான சிறப்பு அலுவலர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் பொதுமக்கள் மட்டும் பங்கேற்கும் வகையில் குறள் ஓவியம்/குறள் ஒப்பித்தல் போட்டி நடைபெறவுள்ளது. கோயம்புத்தூர், வேலூர், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களில் கல்லூரி மாணவர்களுக்கான குறள் சார்ந்த கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஓவியம், படத்தொகுப்புப் போட்டி நடைபெறவுள்ளது. மதுரை, ஈரோடு, நாமக்கல், திருவாரூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் பார் போற்றும் பட்டிமன்ற நடுவர்கள் தலைமையில் திருக்குறள் சார்ந்த பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. சென்னை, வள்ளுவர் கோட்டத்திலும், மெரினா கடற்கரையிலும் திரு. ஜேம்ஸ் வசந்தன் அவர்களின் தமிழோசை நிகழ்ச்சி பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளது. திருப்பூரில் 21.01.2026 புதன் கிழமையன்று அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஆசிரியர்கள் பெரும் அளவில் பங்குபெறும் குறளாசிரியர் மாநாடு (ம) குறள் வினாடிவினா நிகழ்ச்சிகள் மாவட்ட நிருவாக ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளன.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, தமிழ் மொழிக்கென்று முதன்முறையாக ஆண்டுதோறும் நடத்தப்பெற்றுவரும் திறனறித் தேர்வில் வெற்றி பெற்ற 1500 மாணவர்கள் கலந்து கொள்ளும் குறள் மாணவர் மாநாடு கன்னியாகுமரியில் 23.01.2026 மற்றும் 24.01.2026 ஆகிய இரு நாள்கள் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நடைபெறவுள்ளன.

“திருக்குறள் திருவிழா தமிழ்மக்களுக்கானத் தெவிட்டாதப் பெருவிழா“ என்ற பெருமிதத்துடன் குறள் வாரம் நிகழ்வுகளுக்கென தயாரிக்கப்பட்டுள்ள சிறப்புக் காணொலியையும், நிகழ்வு களுக்கானப் பதாகையினையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.01.2026) முகாம் அலுவலகத்தில் வெளியிட்டார்.

இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் மற்றும் திருக்குறள் வார விழா நிகழ்வுகளுக்கான சிறப்பு அலுவலர் முனைவர் வீ.ப.ஜெய சீலன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.